


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை – மகாஜனக் கல்லூரியின் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்

## திரு அந்தோனிப்பிள்ளை ஞானகணேசன்

# நினைவு மலர்

2015 மே 09ம் நாள் லண்டனில் இடம்பெற்ற அவர் அமரரான
முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வின் போது
அவரது மகாஜன நண்பர்களினால் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அந்தோனிப்பிள்ளை ஞானகணேசனின் குடும்பம்

தோற்றம்: 04.02.1970 மறைவு: 06.05.2014

பேரர்கள்: தியோப்பிள்ளை + மாக்றற் (தந்தைவழி)
நல்லப்பா + ஆச்சிமுத்து (தாய்வழி)

தந்தை: அந்தோனிப்பிள்ளை தாய்: ராஜகிளி

சகோதரர்: பவானி (வரதராஜன் )
(மருமக்கள்: பிருந்தாபன், அஜேந்த், அஞ்சனா)

ஞானகிருஷ்ணன் (கல்பனா)
(பெறாமக்கள்: கீர்த்தனா, அர்ச்சனா)

மனைவி சுகந்தி பிள்ளைகள்: விதுசன், ஆதிசன்

மாமன்:: இராமச்சந்திரன் மாமி: கிருபைமாலா

மைத்துனர்: உமேசன்
Dr. நிரோசன் (Narissa)
(மருமக்கள்: Tristan, Aidan)

| தந்தையின் சகோதரர்கள் | தாயாரின் சகோதரர்கள் |
|---|---|
| திரேசம்மா | சொக்கலிங்கம் |
| நேசம்மா | நாசகப்பிள்ளை |
| யேசுதாஸ் | நாகேஸ்வரி |
| சூசைப்பிள்ளை | கோபாலகிருஷ்ணன் |
| மரியதாஸ் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அந்தோனிப்பிள்ளை ஞானகணேசனின் வாழ்க்கை வரலாறு

அறிவில் சிறந்தோரும் ஆற்றல்மிகு வித்தகரும்
அதிகமாய் வாழுகின்ற தெல்லிப்பழை எனும் ஊரில்
விராங்கொடை எனும் இடமாம்
தென்னையும் பனையும் தேன்சுவை மாமரமும்
எலுமிச்சை தோடையும் கமுகும் பப்பாசியும்
கலந்து நின்று பலன் கொடுக்கும்
வண்ணப் பூக்களால் வடிவாய்த்தான் அந்த வீடு
ஒருவேலி மகாஜனா ஓங்கி வளர் கல்விச்சாலை
உலகத்தில் அறிஞர் பலர் - இன்று
உயர்ந்து நிற்கக் காரணமாய்
அதிசிறந்த பாடசாலை அருகில்தான் இந்த வீடு
நல்லப்பர் என்றொரு பெருவிருட்சம்
நாட்டிவிட்ட செல்வங்கள் ஐந்து
கடைசிக்கு மூத்தவளாய் ராஜகிளி எனும் பேராள்
ஆனைக்கோட்டை அந்தோனிப்பிள்ளை
அவர்தம் கரம்பற்றி காதலித்து மகிழ்ச்சி கொண்ட
இனிமையான வாழ்க்கையிலே
இவர்கள் பிறந்தளித்தார்
மூத்தவள் பவானியென்றும்
இளையவன் ஞானகிருஷ்ணன் என்றும்
கடையவன் ஞானகணேசன் என்றும்
நற்பெயர் சூட்டி வைத்தார்
பிள்ளைகள் மூவரும் அன்பினால் கட்டுண்டு
அதிசிறந்த வாழ்க்கை வாழ்ந்தார்
அன்னைக்கும் தந்தைக்கும்
ஆனந்தம் இவர்களாலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையவன் கணேசன் செல்லமாய் வளர்ந்த பிள்ளை
படிப்பிலும் விளையாட்டிலும் படுசுட்டி
அன்போடு மகாஜனா அரவணைத்துப் படித்தவேளை
எல்லா விளையாட்டிலும் ஈடில்லா வீரனாகி
பத்து வருடங்கள் தொடர்ந்து சாம்பியன் இவனே வந்தான்
உயர்கல்வி படிப்பதற்காய் யாழ் இந்துக் கல்லூரி சென்று
படிப்பதைத் தொடர்ந்த வேளை
மூத்தவன் ஞானகிருஷ்ணன் ஜேர்மனி சென்று வாழ
நாட்டின் நிலையது மோசமாக - இவனும்
லண்டனுக்கு வந்து சேர்ந்தான்
அதற்கடுத்து அக்காவும் வந்து சேர அகமகிழ்ந்து
அன்போடு அவர் அணைப்பில் இருந்தகாலை
அன்னையின் இழப்புச் செய்தி அங்கிருந்து வந்தபோது
நிலைகுலைந்து இருவருமே
நீண்ட துயர் தாமடைந்தார்
அக்காவைக் கனடாவுக்கு அனுப்பிவைத்த கணேசனும்
அதிக நாள் என்றில்லாமல் அவனுமே அங்கு சென்றான்
ஆரம்பம் சிலவருடம் மொன்றியலில்
அதன்பிறகு ரொறன்றோவில்
தொழிற்கல்வி படித்ததினால் நல்லவேலை செய்து
நலமாக வாழ்ந்தபோது
தன்னோடு படித்த பிள்ளை சுக்ந்தியை அங்கு கண்டு
கலந்து பேசி காதலித்து கடிமணம் செய்து வாழ்ந்தார்
ஊரில் கொல்லங்கலட்டி இராமச்சந்திரன்
தம்பதிகள் பெற்றெடுத்த தங்கமான பெண் சுகந்தி
இல்லறத்தில் இருவருமே இன்புற்று வாழ்ந்தவேளை
அன்புக்குச் சாட்சியாக அவதரித்தான் விதுசன்
அதன்பிறகு ஆதிசன் ஆசையிலே பெற்ற பிள்ளை
அழகான வீடொன்று அவனேதான் தெரிவுசெய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவர்கள் பொறாமைகொள்ளும் அளவிற்கு இன்பங்கண்டார்
அக்கா குடும்பமும் அருகில் வந்தபோது
ஆனந்தம் இரட்டிப்பாச்சு
மருமக்கள் வந்து மாமாவென்று அழைக்கும்போது
மயங்கித்தான் மகிழ்ச்சி கொள்வான்
பிள்ளைகள் என்றால் போதும் பேரின்பம் அவனுக்கென்றும்
அப்பாவையும் அழைத்து பக்கத்தில் வைத்திருந்தான்
என்ன நினைத்தானோ இரண்டாயிரத்துப் பதின்மூன்றில்
ஜேர்மன் லண்டன் என்றும் இலங்கைவரை தான்சென்று
உறவுகள் நண்பர்களை பார்த்து மகிழ்ந்து வந்தான்
அண்ணன், அண்ணி பிள்ளைகளின்
அன்பினிலே மகிழ்ந்து வந்தான்
அந்த மகிழ்ச்சியிலே அதிகநாள் என்றுமில்லை
என்ன வருத்தமோ எவர்தமக்கும் சொல்லாது
தானே வைத்திருந்து தனக்குள்ளே தான்வருந்தி
மனைவி அறிந்து கேட்க மறுதலித்தான் ஒன்றுமில்லை
அவசரப்பிரிவினிலே அவசரமாய்ச் சேர்த்தபோது
அப்போது நினைக்கவில்லை
பக்கத்தில் இருந்து பார்த்திட்ட மனைவியவள்
அக்காவும் சேர்ந்து அருகில்தான் உடனிருந்தாள்
கண்ணீர் பெருக்கெடுக்க காத்திருந்தார் வருவானென்று
யாரும் நினைக்கவில்லை நம்மைவிட்டுப் போவானென்று
6.5.2014 அன்று இறுதிநாளாய் அமைந்தது, இந்த நாளே
கணேசன் போய்விட்டானாம்
அன்பு மனைவி அழ, ஆசைப்பிள்ளைகள் அழ, அருமை மாமி அழ
அன்பான அப்பா அழ, பக்கத்தில் இருந்து பார்த்திட்ட அக்கா அழ
ஜேர்மனியிலிருந்து பாசம் மிக்க அண்ணன் அழ, மாமா, சித்தப்பா பிள்ளைகள், உறவுகள்
நண்பர், அவன் வளர்த்த நாய்கூட அழ
ஒருமித்து அழுது வாட கணேசன் போயே விட்டான்
காலமெல்லாம் நினைத்து வாட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை - மகாஜனக்கல்லூரி
# ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத் தலைவரின்
## அநுதாபச் செய்தி

மகாஜனன் அமரர் அந்தோனிப்பிள்ளை ஞானகணேசன் அவர்களின் ஓராண்டு நினைவாக அவரது நண்பர்கள் வெளியிடும் நினைவு மலரில் எமது சங்கத்தின் சார்பாக அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அநுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவிக்கின்றோம்.

அமரர்.ஞானகணேசன் கல்லூரியின் கிழக்குப் புறமாக பந்தெறியுந் தூரத்தில் பிறந்து வளர்ந்தவர். பாலர்வகுப்பு முதல் உயர்தரம் வரை மகாஜனாவில் பயின்றவர். கல்வியிலும் விளையாட்டிலும் தலைசிறந்து விளங்கியவர். மெய்வல்லுனர் போட்டிகளில் அனைத்து ஆண்டுகளிலும் சாம்பியனாக வந்த பெருமைக்குரியவர். பதினான்கு வயதிலேயே 17 வயதிற்குட்பட்ட கிறிக்கெட் அணியின் தொடக்கப் பந்துவீச்சாளராகப் பிரகாசித்தவர். உதைபந்தாட்டத்திலும் பந்து தடுப்பாளராக பல ஆண்டுகள் விளையாடியவர். எண்பதுகளில் மகாஜனா உருவாக்கிய மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களில் ஞானகணேசன் முக்கியமானவர்.

இங்கிலாந்தில் வசித்த காலங்களில் எமது சங்கத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஊக்கமுடன் பங்குபற்றி என்றென்றும் மகாஜனனாக வாழ்ந்து மறைந்த அமரர் ஞானகணேசனுக்கு எமது அஞ்சலி.

வைத்திய கலாநிதி (திருமதி) தேவா நாதன்
தலைவர், மகாஜன பழைய மாணவர் சங்கம் - ஐஇ.
05.05.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Dearest Ganesh

Gnanakaneshan has been called by different names, Gnani, Ganesh, Antony, Anton and Gnanakanesh. When it comes to friends, neighbors, colleagues and family he is a person who is funny, caring, sweet, loving, and loyal.

Our paths have been intertwined from kindergarten. We went through schooling, met after many years and fell in love. Ganesh is very loving and perseverant. Throughout our life whenever we face failures, he is the one who is quick to make decisions and thinks of the next step. He never showed worries; he will smile and make sure everybody around him is happy. He has been my best friend, mentor, and a loving husband. I have learned many things in life through him. Ganesh is a young person with a wise of an old person. For a person who does not believe in religion or god, one incredible thing is he has the capability to know what is going to happen. He had the strength to fix anything and everything and nothing faced him even death.

He adored his boys, his priority was his family. He always took time to spend with his sons, took them places, and taught them how to fish, camp, boat, and drive. He would have given his life for his family and friends. He was a person who could be a kid with kids, an adult with adults and an older person with older people.

Ganesh never judged people always heard all the side of a story. He was always willing to help, it did not matter who they are. Ganesh was very hospitable whoever comes to visit was filled with food, drinks, and happiness.

We have been blessed to be part of Ganesh's life. His wonderfulness has left a void in our lives that could never be filled. We miss him dearly and pray he finds peace.

***Wife Suganthi and boys.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பு நண்பா நம்பு!

என் நண்பனின், சகோதரனின், நாட்டுப் பற்றாளனின்நினைவுகளையும், புகழையும், சுமந்துவந்து நிற்கும் நண்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும்  எனது மனம் நிறைந்த வணக்கம்

கணேஷ்!

ஏன் நண்பா? ஏன் இப்படிச் செய்தாய்?
உன் உறவுகளைத் தனியே விட்டுச் சென்றாய்?

ஏன் என்றால் நாம் உன்புகழையும் நினைவையும் சுமந்து
உன்னை வாழ்த்த வேண்டும். நாமும் பின்பற்ற வேண்டும்
என்று நினைத்தாயோ?

கணேஷ்!

அன்று முதல் இன்றுவரை எல்லாவற்றிலும் முதலிடம் பிடிக்க வேண்டும்
என்ற சுயநலக்காரனா?. இல்லை, இல்லை. பெரிய மனசுக்காரன். எமது
எல்லோரது மனங்களையும் அன்பென்னும் சுனாமியால் அடித்து நொருக்கியவன்.
தனது நலன்களையும், சுமைகளையும் ஒருபுறம் வைத்துவிட்டு,
எம்கவலைகளையும், தேவைகளையும் நிறைவேற்ற
துடித்த நாட்டுப்பற்றாளன்! கொடை வள்ளல்!
எங்கேயடா நீ மறைந்து நிற்கிறாய்?
இல்லை, இல்லை. எங்கள் எல்லோரது மனங்களிலும் நிறைந்து நிற்கிறாய்.

கணேஷ்!

100 மீற்றரில் முதலிடம்.
200 மீற்றரில் முதலிடம்
ஈட்டி எறிதலில் முதலிடம்

துடுப்பாட்டத்திலும் சரி, துடியாட்டத்திலும் சரி
முதலிடம்.!  முதலிடம்!. முதலிடம்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை முடித்துக் கொள்வதிலும் உனக்குத்தான் முதலிடம் வேண்டும் என்று நினைத்தாயோ?

அந்த வரத்தையும் ஆண்டவன் தந்து உன்னை மகிழ்வித்தானோ!

நண்பா கணேஷ்!
இந்த மண்ணைவிட்டு விண்ணுலகம் செல்வதிலும் முதலிடம் பெற்றவனே!

நண்பா கணேஷ்!
இவ்வாழ்வின் நெறி ஒழுகி
வெற்றிக் கிண்ணத்தை மனைவியிடத்திலும், பிள்ளைகளிடத்திலும்
மாமா – மாமியிடத்திலும், ஏன் இன்னும் Asseley இடத்திலும் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டவன்.

என் சொல்வேன்.
தூயவன்!. மாயவன்!, மானிடத்தின் இலக்கண வாழ்விற்கு வரைவிலக்கணம் இது என்று வாழ்ந்து காட்டியவன்.
உன் சகோதரியின் வாழ்வே உனது வாழ்வு என்று என்முன் உறுதி எடுத்தவன்.
அவள்பின் தொடர்ந்து சென்று வாழ்ந்து காட்டியவன்.
யாருக்குத் தெரியும்! ஏன் தெரிய வேண்டும்!
இன்று நீ இல்லை சகோதரா!
ஆனால் நான் இருக்கிறேன். நாம் இருக்கிறோம்.

கனடாவிலும் லண்டனிலும் உன் புகழ் ஓங்கும்
பார்முழுக்க அது கேட்கும்.
நம்பு நண்பா!.
நம்பு நண்பா நம்பு! நண்பேன்டா

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.
God bless him. Rest in Peace.

*- உனது அன்பு நண்பன் கிருபா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானகணேசனின் ஒரு பக்கம்

மகாஜனாவில் எண்பதுகளில் தனக்கென ஒரு இடத்தை உருவாக்கிக் கொண்ட மாணவன். நான் அறிந்தவரையில் இந்தக் காலப்பகுதியில் ஞானகணேஷை அறியாதவர்கள் எவருமில்லை. அந்தவகையில் மாணவர்கள், ஆசிரியர்கள் சக பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் என பல-தரப்பட்டவர்களால் அறியப்பட்ட இவர், மகாஜனாவில் விளையாட்டுத்துறையில் தனக்கென ஒரு தனியான முத்திரையைப் பதித்துக் கொண்டார்.

உதைபந்தாட்டம், கிரிக்கெட், மெய்வல்லுனர் போட்டிகள், சாரணர், மாணவ தலைவர் என்று அவரின் திறமைகளையும் பங்களிப்புகளையும் சொல்லிக் கொண்டே போகலாம். அது மிக நீண்டது. அந்தவகையில் நான் அறிந்த அனுபவங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்வது நல்லது என எண்ணுகின்றேன். அதுவும் அவருடைய ஒருபக்கமான கிரிக்கெட்டில், 13 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் அவருடன் முதன்முதலில் இணைந்து விளையாடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுப் பெருமைகொள்கின்றேன்.

எங்களது முதலாவது போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பித்தது. அப்போது அவர் ஒரு ஆரம்ப பந்துவீச்சாளராகவும் ஆரம்பத் துடுப்பாட்டக்காரனாகவும் விளங்கினார்.அவரின் கம்பீரமான தோற்றம், துணிச்சலான ஆளுமை மகாஜனாவின் அணியை வழிநடாத்திச் சென்றது. அவரின் முழுத்திறமையையும் எடுத்துக்காட்டிய களமாக, கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி அமைந்திருந்தது. ஏனெனில் அன்று படுதோல்வியை அடைந்துவிடுவோமென்ற நிலையிலிருந்த எமது அணியைத் தனது திறமையான பந்துவீச்சால் ஏழு விக்கெட்டுக்களைச் சாய்த்து எவரும் எதிர்பாராத விதமாக எமது மகாஜன அணியை வெற்றிக்கு இட்டுச்சென்றார்.

இவ்வாறான பலதிறமைகளைக் கொண்ட, பன்முகம் படைத்த. ஞானகணேஷினின் திடீர் இழப்பு எம்மால் உள்வாங்க முடியாமல் உள்ளது. அவரது நினைவுகள் எங்கள் எல்லோரது மனங்களிலும் மறக்க முடியா-தவைகளாக உள்ளன.

மனிதவாழ்வின் யதார்த்தங்களை ஏற்று நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

உன்நினைவுகளுடன்
*நண்பன் ஞானமுரளி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானகணேசன்

## எங்கள் குடும்பத்துக் குலவிளக்கு

எங்கள் குடும்பத்துக் குலவிளக்காய், ஞான ஒளியாய் விளங்கி எங்களை உயர்விலும் தாழ்விலும் தாங்கி வழி நடத்திய எங்கள் தகப்பன், தலைவன், அன்புக் கண்மணி ஞானகணேஷனின் ஓராண்டு நினைவு நாளையொட்டி அவரது நண்பர்கள் வெளியிடும் இந்த நினைவு மலருக்கு எங்களின் குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எங்கள் அன்பின் சிகரமே கணேஷ்!

நீ இல்லாத இவ்வுலகில் நாம் தனியே பயணித்து ஒருவருடமாகிறது – என்பதை நம்ப முடியவில்லையே – ஐயா!

வெறுமையான உள்ளங்களோடு, வெறும் உடல்களாக வாழ விருப்பமின்றி போராடிக் கொண்டிருக்கிறோம் - ஐயா!

உன்னை இழந்த அந்தநாள் இன்றுபோல் என்றுமே எம்மனதில் அளியாத அவலநாளாக அலைக்கழிக்க வைக்கிறது – ஐயா!

உனது அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள் உன்அன்பும் அரவணைப்பும், ஆலோசனையும் இல்லாது வாடுவது நீயறியாதது அல்லவே – ஐயா!

எவருக்கும் எந்த வார்த்தைகளும் இல்லையே – ஐயா – அவர்களை ஆற்றுவதற்கு!

கனத்த இதயத்தோடு உன்னை – உன்புதல்வர்களூடாகப் பார்க்கிறோம் - ஐயா!

சொல்லில் வடிக்க முடியாதய்யா உங்கள் இழப்பின் பாதிப்பு – ஐயா!

நீங்கள் எனக்காகச் செய்த தியாகங்கள் எண்ணில் அடங்காதவை ஐயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைமாறு எதுவும் அதற்கு ஈடாகுமா ஐயா!
உன் முதல் வார்த்தை அக்கா, உன் கடைசி மூச்சுக்கும் அக்கா சாட்சியாகுவேன் என்று கனவிலும் எண்ணவில்லையே ஐயா!

நான் பார்த்து, பார்த்து வளர்த்த என் கண்மணியின் சிரிக்கும் அன்பான முகம் எம்மைவிட்டு நிஜத்தில் எனக்கு முதலில் மறைந்து போகும் என்று, என்றுமே எண்ணியது இல்லையே ஐயா!

எமது இமயமான நம்பிக்கை நீயல்லவா? அது இல்லையென்று போனதே ஒரே இரவில்! அந்த இருளான இரவில் நடந்த இரக்கமில்லாத காலனின் அரக்கத்தனத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட முடியாமல் ஒவ்வொரு நொடியும் வாழ்க்கையுடன் போராடிக் கொண்டிருக்கிறோம் - ஐயா!

உனது அண்ணன் முத்துக்கு, முத்தாக, சொத்துக்கு, சொத்தாக அண்ணன், தம்பி பிறந்து வந்தோம் ஒன்றுக்குள் ஒன்றாக' என சின்ன வயதில் பாடி மகிழ்ந்தவன், - அன்றும் இன்றும் உன்னை எண்ணி அழ மறந்த நாட்களே இல்லை ஐயா!

என்றும் உன் நீங்கா நினைவுகளுடன்
*-உன் அக்கா பவானியும் குடும்பத்தினரும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports Achievements of Anthonippillai Gnanaganeshan

## Athletics

At Mahajana College, he won the Championship at every age group and won all three events which he participated. He won many medals for Mahajana at inter school competitions.

## Cricket

He was only 14 years old, when he opening the bowling and batting for under 17 team.
He went to play for under19 team, which was the best team of the Jaffna District that year.

## Football

He was the goal keeper for 3rd, 2nd and 1st xi teams Under Legendary coach Late Mr T P Path-manthan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org